**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**A031 தமிழக வரலாறு**

**ஜனவரி – பிப்ரவரி 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழக நிலப்பரப்பை எத்தனை காலகட்டத்திற்குள் அடக்கலாம்?
2. சேலம் மாவட்டத்தில் உள்ள சிறந்த மலை எது ?
3. பிராமி மொழி எதற்குரியது?
4. இறந்தவர்களுக்காக நடப்படுவது எது?
5. தொல்காப்பியம் எச்சங்கத்தில் தோன்றியது?
6. மாலிகாபூர் யார்?
7. செயின்ட் ஜார்ஜ் கோட்டை எதன் தலைமை இடமாக விளங்கியது?
8. திருப்பூரில் கொடி காத்தவர் யார்?
9. பாஞ்சாலங்குறிச்சியை ஆண்டவர் யார்?
10. ஐரோப்பியர் காலத்தில் தமிழகத்தின் வணிகத் துறைமுகம் எது?
11. சிவாஜி இஸ்லாமியரிடமிருந்து கைப்பற்றிய கோட்டை எது?
12. நாயக்கர் காலத்தில் சிற்றூரில் வரி வசூலிப்பவர் யார்?
13. தங்க நாணயங்களுள் ஒன்றன் பெயரை குறிப்பிடுக.
14. இருவகைக் கூத்துகள் எவை?
15. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் கணவனை இழந்த பெண்ணின் நிலை யாது ?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தமிழகத்தின் எல்லையாகக் குறிப்பிடப்படும் ஊர்கள் எவை?
2. வரலாற்றுச் செய்திகள் குறித்த சங்க இலக்கியச் சான்றுகள் மூன்றினைத் தருக.
3. நாயக்கர் ஆட்சியில் வசூலிக்கப்பட்ட வரிகள் எவை?
4. முதல் கர்நாடகப் போர் எங்கு, யார் யாருக்கிடையே நடந்தது?
5. ராஜராஜ சோழன் ஆட்சியில் நடைபெற்ற தேர்தல் முறை குறித்து எழுது.
6. சரபோஜி மன்னர்கள் பற்றிச் சிறுகுறிப்பு தருக.
7. ஆங்கிலேயர் ஆட்சிக்கால நாணயங்கள் குறித்து எழுதுக.
8. கர்மவீரர் என அழைக்கப்பட்டவர் யார்? அவரின் சிறப்புகளுள் சிலவற்றை எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ.) சங்க இலக்கியம் வரலாற்றுக் களஞ்சியம் –நிறுவுக.

(அல்லது)

(ஆ.) சோழர் ஆட்சி குறித்து விவரி.

2. (அ.) நாயக்க மன்னர்களின் ஆட்சி சிறப்பைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ.) தமிழகத்தில் மராட்டியர்களின் பங்களிப்பு குறித்து விவரி?

3. (அ.) இஸ்லாமியர்களின் படையெடுப்பு குறித்து விவரி?

(அல்லது)

(ஆ.) விடுதலைக்குப் பிந்தைய தமிழக முதல்வர்கள் குறித்துக் கட்டுரை வரைக.

*** 